தினமணி

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 71.72 அடி**

First Published : 05 Apr 2010 04:24:05 AM IST

தஞ்சாவூர், ஏப் 4: மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 71.72 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,470 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து 1,900 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. கல்லணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**முந்திரியில் தேயிலை கொசு தாக்குதலை கட்டுப்படுத்த யோசனை**

First Published : 05 Apr 2010 04:21:13 AM IST

வேதாரண்யம், ஏப் 4: நாகை மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள முந்திரி சாகுபடியில் காணப்படும் தேயிலை கொசு தாக்குதலை கட்டுப்படுத்தும் முறை குறித்து விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நாகப்பட்டினம் மாவட்ட தோட்டக் கலை துணை இயக்குநர் கோ. கணேசன் (பொறுப்பு) வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு:

வேதாரண்யம் பகுதியில் கோவில்பத்து,வெள்ளப்பள்ளம், செம்போடை, தேத்தாகுடி, தோப்புத்துறை, புஷ்பவனம் உள்ளிட்ட பகுதிகளில் தோட்டக் கலை சிறப்பு ஆய்வு குழுவினர் ஆய்வு செய்தனர்.

ஆய்வின்போது முந்திரி பயிரில் தற்போது தேயிலை கொசுக்களின் தாக்கம் அதிகமாகக் காணப்படுவது தெரிய வருகிறது.

இதை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் புரோபினோபாஸ் 2 மில்லி அல்லது குளோர்பைரிபாஸ் 2 மில்லி என்ற விகிதத்தில் கலந்து காலை அல்லது மாலை வேளையில் தெளிக்வும்.

முந்திரியில் தேயிலை கொசு அதிகமாக இருந்தால் அது அருகில் உள்ள மா மரங்களுக்கும் பரவி மா மகசூலை பாதிக்கும்.

தற்போது மா பயிரில் பூ மற்றும் பிஞ்சு உதிர்வதை தடுக்க பிளானோபிக்ஸ் (என்.ஏ.ஏ) என்ற வளர்ச்சி ஊக்கியினை 4.5 மில்லி என்ற அளவில் 10 லிட்டர் தண்ணீரில் கலந்து காலை அல்லது மாலை வேளையில் தெளிக்கவும்.
இதே போன்று 10 நாள்கள் கழித்து மீண்டும் ஒரு முறை தெளிக்கவேண்டும் என்று அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மரக் கன்று நடும் விழா**

First Published : 05 Apr 2010 04:20:42 AM IST

நீடாமங்கலம் ஏப். 4: நீடாமங்கலம் ஒன்றியம், மேலாளவந்தசேரி புனித மரியன்னை உயர்நிலைப் பள்ளி, மன்னார்குடி யுனிவர்செல் அறக்கட்டளை இணைந்து சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, மரக்கன்று வழங்கும் விழாவை நடத்தின.

மேலாளவந்தசேரி தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியை ஜெசிகலாவெனிட்டாமேரி தலைமை வகித்தார்.

பள்ளிக் குழுத் தலைவர் என். செல்வம் முன்னிலை வகித்தார். மரக் கன்றுகளை வழங்கி, ஒன்றிய ஆணையர் ப. சிவஞா னபாரதி, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அன்பழகன் யுனிவர்செல் அறக்கட்டளை மானே ஜிங் டிரஸ்டி ஜெயசக்தி, ஆகியோர் பேசினர்.

**சிவகிரி அருகே இயற்கை வேளாண்மை கலந்தாய்வுக் கூட்டம்**

First Published : 05 Apr 2010 01:15:01 AM IST

சிவகிரி, ஏப். 4:சிவகிரி அருகே உள்ள உள்ளார் கிராமத்தில் இயற்கை வேளாண்மை சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு மற்றும் மூலிகை மருத்துவப் பயன்பாடு குறித்த கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஊராட்சித் தலைவி பூ. கலைச்செல்வி தலைமை வகித்தார். வட்டார வளர்ச்சி அலுவலர்கள் இரா. லீலா, கே. மருதப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

உள்ளார், தளவாய்புரம் ஊராட்சி மன்றமும், சிவகாசி புராஜெக்ட் சேவை நிறுவனமும் இணைந்து நடத்திய இக் கூட்டத்தில், விவசாயத்தில் ரசாயன உரங்களை தவிர்த்து மண்புழு மற்றும் இயற்கை உரங்களைப் பயன்படுத்த வேண்டும் எனவலியுறுத்தப்பட்டது.

மேலும், வீடுகள்தோறும் மூலிகைச் செடிகளை வளர்க்க வேண்டும். வீடுகள் மற்றும் சாலை ஓரங்களில் மரக் கன்றுகள் நடவேண்டும். பிளாஸ்டிக் பொருள்களை தவிர்க்க வேண்டும். இல்லம் தோறும் கழிவறைகள் அமைக்க வேண்டும். வீடுகளில் கழிவறை கட்ட போதிய இடமில்லாதவர்கள் பொது சுகாதாரக் கழிவறைகளை பயன்படுத்த வேண்டும் என அறிவுத்தப்பட்டது.

இதில் புராஜெக்ட் சேவை நிறுவனம் சார்பில் கெயிட்டின், லீ (இங்கிலாந்து) ஜெனி (ஆஸ்திரேலியா) மாவட்ட ஒருங்கிணைப்பாளார் ஆயிஷா, மாரியப்பன் ஆகியோரும், பொறியாளர்கள் தங்கராஜ், செண்பககனி, ஊராட்சி மன்ற உதவியாளர் குருசாமி, மக்கள் நலப்பணியாளர் தங்கமலை மற்றும் கிராம மக்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

தினமலர்

**மரவள்ளிக்கு கூடுதல் விலை பயிரிட விவசாயிகள் ஆர்வம்**

சிறுபாக்கம் : சிறுபாக்கம், வேப்பூர் பகுதிகளில் கூடுதல் விலை கிடைப்பதால் விவசாயிகள் மரவள்ளி பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

சிறுபாக்கம் சுற்றியுள்ள அரசங்குடி, எஸ்.புதூர், மாங்குளம், மங்களூர், ரெட் டாக்குறிச்சி, ஒரங்கூர் உள்ளிட்ட 40க்கும் மேற்பட்ட கிராமங்களிலும், வேப்பூர் அதனை சுற்றியுள்ள பெரியநெசலூர், அரியநாச்சி, கழுதூர், சிறுநெசலூர் உட்பட 50க்கும் மேற்பட்ட கிராமங்களிலும் விவசாயிகள் தங்களது நீர்ப்பாசன நிலங்களில் மரவள்ளி பயிர் செய்வது வழக்கம். அண்மைகாலமாக மரவள்ளி மூட்டை ஒன்றுக்கு 100, 200 ரூபாய் என விலை போனது. இதனால் விவசாயிகள் மஞ்சள், கரும்பு, நெல் பயிர்களை அதிகளவு விளைவித்தனர்.

குறைந்த அளவு விவசாயிகளே மரவள்ளி பயிரிட்டனர். ஜனவரி மாதத்தில் மரவள்ளி அறுவடை செய்த விவசாயிகளுக்கு எப்போதும் இல்லாத அளவில் மூட்டை ஒன்றுக்கு 500 முதல் 600 ரூபாய் வரை கூடுதல் விலை கிடைத்தது. இதனால் நடப்பு ஆண்டில் விவசாயிகள் கூடுதலாக மரவள்ளி பயிர் செய்து வருகின்றனர்.

**தக்காளி விலை தொடர்ந்து சரிவு**

ஒட்டன்சத்திரம் : ஒட்டன்சத்திரத்தில் தக்காளி வரத்து அதிகரித் துள்ளதால் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. ஒட்டன்சத்திரம் அருகேயுள்ள தர்மத்துப்பட்டி, ஸ்ரீராமபுரம் உள்ளிட்ட பல கிராமங்களில் தக்காளி தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகிறது. இதன் காரணமாக ஒட்டன் சத்திரம் மார்க் கெட்டிற்கு தக்காளி வரத்து அதிகரித்துள்ளது.கேரளா, கோவில்பட்டியில் இருந்து வியாபாரிகள் தக்காளி வாங்க வரத் தொடங்கி உள்ளனர். இருந்த போதிலும் தக்காளி விலை இறங்குமுகமாகவே இருக் கிறது. கடந்த வாரம் கிலோ ரூ.4க்கு விற்ற தக்காளி விலை நேற்று ரூ.2.70 க்கே விற்றது.

**ஈரோடு மாவட்டத்தில் தீவன தட்டுப்பாடு 30 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி குறைவு**

ஈரோடு: கோடை வெயில் வெளுத்து கட்டுவதால், ஈரோடு மாவட்டத்தில் தீவன தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. 30 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி குறைந்ததால், பால் உற்பத்தியாளர்கள் கவலையில் உள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தில் விவசாயம் மட்டுமின்றி கால்நடை வளர்ப்பிலும் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். வாய்க்கால் பகுதியில் மாடுகளுக்கு தேவையான பசுந்தீவனங்கள் இயற்கையாகவே கிடைப்பதால், கறவை மாடுகளை விவசாயிகள் அதிகம் வளர்க்கின்றனர். மாவட்டத்தில் 20 ஆயிரத்துக்கும் அதிகமான கறவை மாடுகள் உள்ளன. கொள்முதல் நிலையங்கள் மூலம் தினமும் 2.30 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது.

தேவையை விட அதிகம் பால் உற்பத்தியாவதால், ஆவின் நிறுவனம் தினமும் சென்னைக்கு ஒரு லட்சம் லிட்டர் பாலை வரை ரயிலில் அனுப்புகிறது. ஈரோடு மாவட்டத்தில் 700 பால் உற்பத்தியாளர் கொள்முதல் மையங்கள் செயல்படுகின்றன. சில ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால், விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், மாவட்டத்தில் பெரும்பாலான நீர் நிலைகள் வறண்டு காணப்படுகின்றன. மழை பொய்த்த நிலையில், பனி காலமான ஜனவரி மாத இறுதியில் கோடையை மிஞ்சும் வெயில் அடிக்க துவங்கியது. காவிரியாறு வறண்டு காணப்படுகிறது. பவானிசாகர் அணைக்கு நீர் வரத்து இல்லாமல், அணையின் நீர்மட்டம் குறைந்து வருகிறது. நீர்நிலைகள் வற்றிய நிலையில், கறவை மாடுகளுக்கு தீவனத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் தினமும் 18 லிட்டர் வரை கறக்கும் கலப்பின மாடுகளில் ஐந்து முதல் ஏழு லிட்டர் வரை பால் உற்பத்தி குறைந்துள்ளது. பால் கொள்முதல் மையங்களில் தினமும் 2.30 லட்சம் லிட்டர் வரை பால் கொள்முதல் செய்யப்பட்டது, தற்போது 30 ஆயிரம் லிட்டர் குறைந்து இரண்டு லட்சம் லிட்டர் மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் சங்க பொருளாளர் ராமசாமி கூறியதாவது:

ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் 700 பால் கொள்முதல் நிலையம் உள்ளன. 20 ஆயிரத்துக்கும் அதிகமான மாடுகள் உள்ளன. தினமும் 2.30 லட்சம் லிட்ட் பால் உற்பத்தியாளர்களிடம் கொள்முதல் செய்யப்படும். நடப்பாண்டில் போதிய பருவமழை பெய்யவில்லை. முன்னதாகவே கோடை காலம் துவங்கி வெயில் அடித்து வருவதால், நீர் நிலைகள் ஜனவரி இறுதியிலேயே வறண்டு விட்டன. இதனால், மேய்ச்சலுக்கு செல்லும் மாடுகளுக்கு தீவன தட்டுப்பாடு உள்ளது. தற்போது பால் கொள்முதல் 30 ஆயிரம் லிட்டர் குறைந்துள்ளது.
இவ்வாறு அவர் கூறினார்.

**தேங்காய் விற்பனைக்கு கலெக்டர் அறிவுரை**

கிருஷ்ணகிரி: 'கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தேங்காய்களை தற்போது விற்பனை செய்து அதிக வருவாய் பெறலாம்' என கலெக்டர் சண்முகம் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 14,492 ஹெக்டேரில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக மாவட்டத்தில் காவேரிப்பட்டணம், மத்தூர், ஊத்தங்கரை, பர்கூர், கிருஷ்ணகிரி ஆகிய சுற்றுவட்டார பகுதிகளில் அதிக அளவில் தென்னை தோப்புகள் உள்ளன.

கோவை வேளாண் பல்கலைக்கழக வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமை திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையத்தின் சார்பாக தேங்காய் உற்பத்தி, விலை விவரம், விற்பனை செய்தல் மற்றும் அதன் பயன்பாடு தொடர்பாக விவசாயிகள் பயன் பெறும் வகையில் விலை முன் அறிவிப்பு வெளியிட்டுள்ளனர். மார்ச், ஏப்ரல் மற்றும் ஜூன் மாதத்தில் அதிக அளவில் எதிர்பார்க்கப்படும் தேங்காய் வரத்து மற்றும் வரியில்லாத பாமாயில் இறக்குமதி ஆகிய காரணங்களினால் தேங்காய் விலை மார்ச் மாதத்தில் இருந்து வரும் ஜூன் மாதம் வரை இறங்கு முகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதே நேரத்தில் இளநீர் தேவை கோடைகாலங்களில் அதிகமாக இருப்பதாலும், வரும் மாதங்களில் தேங்காய்க்கு லையான தேவை இருப்பதாலும் விலைக்குறைவு பெரிய அளவில் இருக்காது. மார்ச் முதல் ஜூன் மாதம் வரை பண்ணை அளவில் தேங்காய் விலை ஒன்றுக்கு 4 ரூபாய் 25 காசு முதல் 4 ரூபாய் 80 காசு வரை நிலவும். மேலும் ஜூன் மாதம் வரை விலை அதிகரிக்க வாய்ப்பில்லை. எனவே கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த தென்னை சாகுபடி விவசாயிகள் தற்போது தங்களிடம் உள்ள தேங்காய்களை உடனடியாக விற்பனை செய்து அதிக வருவாய் பெறலாம்.

**சோழவந்தான் பகுதியில் வெற்றிலை விவசாயம் அழிகிறது : பிழைப்புக்காக இடம் பெயரும் விவசாயிகள்**

சோழவந்தான் : மதுரை மாவட்டம் சோழவந்தான் பகுதியில் கருஞ்சுருலை, வேர்ப்பூச்சி நோயால் வெற்றிலை விவசாயம் அழிகிறது. பிழைப்புக்கு வழியின்றி கொடிக்கால் விவசாயிகள் குடும்பம், குடும்பமாக திருப்பூர் உட்பட பல்வேறு பகுதிகளுக்கு இடம் பெயர்கின்றனர்.
சோழவந்தானின், நார்ச்சத்து. மணம், குணம் நிறைந்த கருப்பு மற்றும் வெள்ளை வெற்றிலைக்கு ஏக கிராக்கி இருந்தது. கருப்பு வெற்றிலை வெளிமாநிலம், வெளிநாடுகளுக்கும், வெள்ளை வெற்றிலை தமிழகம் முழுவதும் சப்ளை செய்யப்பட்டது. 15 ஆண்டுகளுக்கு முன் சோழவந்தான், கருப்பட்டி, இரும்பாடி, மட்டப்பாறை, நாச்சிகுளம், மண்ணாடிமங்கலம், திருவேடகம், தச்சம்பத்து உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 1,000 எக்டேர் நிலப்பரப்பில் கொடிக்கால் விவசாயம் ஜோராக நடந்தது. நோய் தாக்குதல் காரணமாக படிப்படியாக சாகுபடி குறைந்து, தற்போது அழிவுப்பாதையின் விளிம்பிற்கு தள்ளப்பட்டுள்ளது.
நோய் தடுப்பு நடவடிக்கை இல்லை: வெற்றிலையை தாக்கும் கருஞ்சுருலை, வேர்ப்பூச்சி போன்ற நோய்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் தோட்டக்கலைத்துறையினர் கவனம் செலுத்தவில்லை. இதனால் கொடிக்கால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. சோழவந்தான் பகுதிகளில் தற்போது வெறும் 200 ஏக்கர் என்ற அளவில் சாகுபடி சுருங்கி விட்டது.
வெற்றிலை விவசாயத்திற்கு மானியம், இலவச பூச்சிக்கொல்லி மருந்து, வங்கிகள் மூலம் விவசாய கடன் உட்பட எவ்வித சலுகையும் வழங்கப்படுவது கிடையாது. சொந்த முதலீட்டில் விவசாயம் செய்யும் போது, நஷ்டத்தை ஈடுகட்ட வழியின்றி, பஞ்சம் பிழைப்பதற்காக விவசாயிகள் திருப்பூர் உட்பட பல்வேறு பகுதிகளுக்கு இடம் பெயர்கின்றனர்.
கண்ணீர்: சோழவந்தான் பகுதியில் நோய் தாக்குதலால் வெற்றிலை கொடிகள் கருகி வருகின்றன.
விவசாயி மருதமுத்து கூறும்போது, "பயிரிடப் பட்ட ஆறாவது மாதத்தில் இருந்து வெற்றிலையை பறிக்கலாம். ஓராண்டு

வரை 15 அல்லது 20 நாட்களுக்கு ஒருமுறை வெற்றிலை பலன் தரும். குத்தகைக்கு நிலத்தை வாங்கி வெற்றிலை பயிரிட்டேன். பலன் கிடைக்கும் நேரத்தில் நோய் தாக்குதலால் கொடிகள் கருகி விட்டன. வேறு தொழிலுக்கு மாறலாமா என யோசிக்கிறேன்," என்றார். விவசாயி விஜயகுமார் கூறும்போது, "நோய் தாக்குதலை தடுக்க அரசு தரப்பில் எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை" என்றார்.

கர்நாடக வெற்றிலை இறக்குமதி: புகழ் பெற்ற சோழவந்தான் வெற்றிலை உற்பத்தியை பாதுகாக்க நடவடிக்கை எடுக்காத நிலையில், கர்நாடக மாநிலத்தில் இருந்து தமிழகத்திற்கு வெற்றிலை இறக்குமதி செய்யப்படுகிறது. சுவையற்ற ஒட்டு ரகத்தை சேர்ந்த வெற்றிலையை கர்நாடக விவசாயிகள் ஏராளமாக உற்பத்தி செய்து, தமிழக வியாபாரிகளிடம் விற்கின்றனர்.

இதன் வருகையால், சோழவந்தான் வெற்றிலை விலையில் வீழ்ச்சியடைந்துள்ளது. நோயின் தாக்கம், விலை வீழ்ச்சி போன்ற பல்வேறு காரணங்களால், சோழவந்தானில் கொடிக்கால் விவசாயம் அழிகிறது. தடுக்க வேண்டிய தோட்டக்கலைத்துறையினர், மவுனமாக இருப்பது வேதனைக்குரியது. நோய் தடுப்பு நடவடிக்கையை உடனே மேற்கொள்ள வேண்டும். விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்கியும், வங்கி மூலம் கடன் கிடைக்கவும், மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**பஜ்ஜி மிளகாய்க்கு நல்ல விலை விவசாயிகளுக்கு 'இனிப்பு' செய்தி**

கூடலூர் : கூடலூர் பகுதியில் விளைவிக்கப்படும் பஜ்ஜி மிளகாய்க்கு நல்ல விலை கிடைப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

நீலகிரி மாவட்ட காலநிலை மற்றும் கேரள மாநில காலநிலையும் நிலவும் கூடலூர் பகுதியில், தேயிலை, காபி, குறுமிளகு, பாக்கு உட்பட நீண்டகால பயன் தரும் விவசாயப் பயிர்களை மட்டுமே விவசாயிகள் நம்பியிராமல், குறுகிய காலத்தில் மகசூல் தரும் பயிர்களையும் பயிரிட்டு பயனடைந்து வருகின்றனர். வயல் வெளிகளில், பருவ மழையில் நெல், கோடைகாலத்தில் காய்கறிகள் பயிரிடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர். இங்கு உற்பத்தி செய்யப்படும் காய்கறிகள் பெரும்பாலும் கேரளா மாநிலத்துக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

கூடுதல் கவனம் செலுத்தும் பஜ்ஜி மிளகாய், சென்னை, கோவை, மதுரை, ஈரோடு, மேட்டுப்பாளையம், திருப்பூர் பகுதிகளுக்கு அதிகளவு கொண்டு செல்லப்படுகின்றன. கடந்தாண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் கிலோவுக்கு 17 ரூபாய் வரை விலை கிடைத்தது.

நடப்பாண்டும், பஜ்ஜி மிளகாய்க்கு கிராக்கி ஏற்பட்டுள்ளதால், கிலோ 20 ரூபாய் வரை விற்கப்படுகிறது; இது, விவசாயிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. விலையில் ஏறுமுகம் தென்படும் என்பதால், மே மாத இறுதியில், கிலோவுக்கு 35 ரூபாய் வரை கிடைக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

**கொளுத்தும் வெயிலால் தேன் உற்பத்தி குறைவு**

மானாமதுரை : கொளுத்தும் வெயிலுக்கு தேனீக்களும் தப்பவில்லை. இதனால் தேன் உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மானாமதுரையில் மா, கொய்யா, சப்போட்டா, முந்திரி உள்ளிட்ட 16 வகையான பழமரங்கள் ஆயிரக்கணக்கான ஏக்கரில் நடவு செய்யப்பட்டுள்ளன. கோடையில் ஆண்டுதோறும் டன்கணக்கில் விளைச்சலை கொடுக்கும் பழ மரங்களிலிருந்து இந்த ஆண்டு பூக்கள் உதிர்ந்து மரங்களில் பிஞ்சுகள் விடவில்லை. இதனால் விளைச்சல் பாதித்துள்ளது. பூக்களிலிருந்து தேன் சேகரிப்பில் உள்ள தேனீக்களின் தேனடைகள் மிகச்சிறியதாகவே உள்ளன. கொளுத் தும் வெயிலுக்கு ராணி தேனீக்கள் முட்டையிடுவதும் குறைந்துள்ளது. தேன் தொழிலில் ஈடுபட்டுள்ள சிலர், வருமானம் இன்றி தவிக்கின்றனர்.

குப்பன் கூறியதாவது: 20 ஆண்டுகளாக இத்தொழில் செய்து வருகிறேன். மானாமதுரையில் முன்பு பூக்கொல்லைகள்

நிறைய இருக்கும்.அதே போல பழத்தோட்டங்களும் அதிகம் இருந்தது. இவை வீட்டுமனைகளாக மாறி வருவதால் தேனீக்கள் கூடுகட்டுவது குறைந்து வருகிறது. இந்தாண்டு மழை இல்லாததால் பழமரங்களில் பூக்கள் அதிகம் பூக்கவில்லை.மேலும் கொளுத் தும் வெயிலால் பூக்கள் விரைவில் வாடிவிடுகின் றன. ஒரு நாளைக்கு ஒரு லிட்டருக்கு குறையாமல் எடுப்போம். இப் போது மூன்றுபேர் சேர்ந்தும் அரை லிட்டர் தேன் எடுப்பதே கஷ்டமாக உள்ளது. அரை லிட்டர் தேன் ஐம்பது முதல் எழுபது ரூபாய் வரை விற்கிறோம், என்றார்.

**இயற்கை உரங்களாக ஆடு, மாட்டுச்சாண விற்பனை அமோகம் : கேரளாவில் அதிக கிராக்கி இருப்பதால் லாபம்**

போடி : போடி பகுதியில் ஆடு, மாட்டு சாணத்தை காயவைத்து இயற்கை உரமாக கேரளாவிற்கு விற்பனைக்கு அனுப்பும் வியாபாரம் அமோகமா நடக்கிறது. விளைநிலங்களில் விளைச் சல் அமோகமாக உள்ளதால் கேரள விவசாயிகள் விரும்பி வாங்கி செல்கின்றனர்.

தமிழகத்தில் ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடை வளர்ப்புகள் அதிகளவு உள்ளது. கால்நடைகளின் சாணங்கள் இயற்கை உரங்களாக அதிகளவில் பயன்படுகின்றன. இதற் காக பலர் ஆடு, மாடுகளை வளர்த்து கிடை போட்டு சாணங்களை மொத்தமாக சேர்க்கின்றனர்.

இயற்கையாக கிடைக்கும் இந்த உரங்களை தேனி மாவட்டத்தில் என்.டி.பட்டி, சுருளிப்பட்டி பகுதியில் முந்திரி தோட்டங்களுக்கு மட்டுமே பயன்படுத்தி வருகின்றனர். மற்ற பகுதிகளில் செயற்கை உரங்களையே அதிகமாக பயன்படுத்தி வருவதால் மண்ணின் தன்மை மட்டுமின்றி விளைச்சலும் குறைந்து வறண்ட நிலமாக மாறி வருகிறது. ஆனால் கேரளாவை பொறுத்தவரை இயற்கை உரங்களையே அதிகமாக பயன்படுத்துவதால் மண்ணின் தன்மை மட்டுமின்றி ஏலம், காப்பி, மிளகு, காய்கறி விளைச்சலும் அதிரித்து பசுமை நிறைந்து காணப்படுகின்றன. தமிழகத்தில் போடி, பொட்டிப்புரம், ஆண்டிபட்டி, ராஜபாளையம், அருப்புக்கோட்டை, விருதுநகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள கால்நடை வளர்ப்போர் இயற்கை உரங்களான ஆடு மற்றும் மாட்டுச்சாணங்களை கேரளாவிற்கு ஏற்றுமதி செய்வதற்காக உலர்த்தி வருகின்றனர். கேரள விவசாயிகள் லோடுகணக்கில் லாரிகள் மூலம் வாங்கிச்சென்று விவசாயம் செய்து வருகின்றனர்.

தேனி மாவட்டத்தில் ஆட்டு சாணம் ஒரு லோடு எட்டாயிரம் ரூபாயும், மாட்டு சாணம் ஏழாயிரம் ரூபாய் வரையும் கேரள விவசாயிகளால் கொள்முதல் செய்யப்படுகிறது. கேரள பகுதியான ராஜாகாடு, என்.ஆர்.சிட்டி, மூணாறு, நெடுங்கண்டம், சாந்தாம்பாறை, உடும்பஞ்சோலா உள்ளிட்ட பகுதி விவசாயிகள் இயற்கை உரமாக இதை பயன்படுத்தி அமோக விளைச்சல் கண்டு வருகின்றனர்.

**விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட மாநாடு**

திருவாரூர்: குடவாசலில் விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட மாநாடு நடந்தது. சங்க தலைவர் வீரையன் மாநாட்டை தொடக்கி வைத்தார். இதில் புதிய நிர்வாகிகள் தேர்வு நடந்தது. மாவட்ட தலைவராக சாமியப்பன், செயலாளராக நாவலன், துணைத் தலைவர்களாக தங்கராசு, மணியன், கைலாசம், துணைச் செயலாளர்களாக மணியன், வசந்தா, சீனிவாசன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மின் தட்டுப்பாட்டை தவிர்க்க கேரளாவில் வழங்கப்படுவது போல் இலவச குழல் விளக்கு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. விவசாய சங்க மாநில துணைத் தலைவர் முகமது அலி, மாவட்ட செயலாளர் நாவலன், மா.கம்யூ. மாவட்ட செயலாளர் நாகராஜன், விவசாய சங்க மாவட்ட செயலாளர் சுந்தரமூர்த்தி, மாநில மைய தலைவர் ராசா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**மண்ணுளி பாம்பை ஒப்படைத்த விவசாயிகள்**

நகரி : மல்லிகை தோட்டத்தில் புகுந்த மண்ணுளி பாம்பை விவசாயிகள் பிடித்து வனத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.
புத்தூர் அடுத்துள்ள திம்மாபுரம் கிராமத்தில் விவசாயிகள் மல்லிகை தோட்டத்தில் பூ பறித்தனர். அப்போது, மூன்று அடி நீளமுள்ள மண்ணுளி பாம்பு ஊர்ந்து சென்றதை பார்த்தனர். அதை உயிருடன் பிடித்த விவசாயிகள் புத்தூர் வனத்துறை அதிகாரி சுப்பிரமணியத்திடம் ஒப்படைத்தனர். இவர்களை, வனத்துறை அதிகாரிகள் பாராட்டினர்.

**துல்லிய பண்ணையவிவசாயிகளுக்கு பயிற்சி**

குடியாத்தம்:கே.வி.குப்பம் அடுத்த திருமணியில் துல்லிய பண் ணைய விவசாயிகளுக்கு ஒரு நாள் சிறப்பு பயிற்சி முகாம் நடந்தது.தமிழக அரசின் நீர்வள நிலவள திட்டத்தின் மூலம் கவுண்டன்ய நதி உபவடிநீர் பாசன பகுதிக்கு உட்பட்ட குடியாத்தம், கே.வி.குப்பம், காட்பாடி, அணைக்கட்டு, வேலூர், பேரணாம்பட்டு ஆகிய வட்டாரங்களில் மேலாலத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் கரும்பு ஆராய்ச்சி நிலையம் சார்பில் 20 எக்டேர் பரப்பளவில் துல்லிய பண்ணையத்தின் மூலம் காய்கறிகள் மற்றும் வாழை போன்ற பயிர்கள் சாகுபடி செயல் விளக்கங்கள் அமைக் கப்பட உள்ளன.இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட உள்ள துல்லிய பண்ணையம் மூலம் சாகுபடி செய்ய விருப்பம் தெரிவித்த 50 விவசாயிகளுக்கு திருமணி கிராமத்தில் ஒரு நாள் சிறப்பு பயிற்சி முகாம் நடந்தது. மேலாலத்தூர் கரும்பு ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் சுரேஷ் தலைமை வகித்தார். உதவி பேராசிரியர் சத்தியா வரவேற்றார். உதவி பேராசிரியர்கள் சுதாகர் , ஷீபாஜாஸ்மின், சுந்தரவதனா ஆகியோர் பயிற்சி அளித்தனர். முதுநிலை ஆராய்ச்சியாளர் மாரியப்பன் நன்றி கூறினார்.

**மாம்பழம் விளைச்சல் குறைவு : ராஜபாளையம் விவசாயிகள் கவலை**

ராஜபாளையம் : மாம்பழம் விளைச்சல் குறைவாக இருக்கும் நிலையில், பலத்த காற்று வீசி பிஞ்சு காய்கள் கீழே விழுவதால் ராஜபாளையம் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.
ராஜபாளையம் மேற்கே அய்யனார் கோயில், சம்மந்தபுரம், செண்பகத்தோப்பு, சேத்தூர், தேவதானம் உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் மாந்தோப்புகள் உள்ளன. சப்பட்டை, பஞ்சவர்ணம் ரக மாமரங்கள் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளன.
நடப்பு பருவத்தில் மாம்பூக்கள் பருவம் தவறி மிகவும் தாமதமாக பூத்தன. அதிலும் குறைவாகவே காய் பிடித்தன. 30 சதவீத மரங்கள் மட்டுமே காய்ப்பிடித்திருப்பதால் விவசாயிகள் அதிருப்தியில் இருந்தனர். உணவு, தண்ணீரைத்தேடி மலையடிவாரத்தில் உள்ள மாந்தோப்புகளுக்குள் காட்டெருமை உள்ளிட்ட விலங்குகள் புகுந்ததால், அதிலும் சேதம் ஏற்பட்டது. இந்நிலையில் மார்க்கெட்டில் மாம்பழ வரத்து குறைவாக இருக்கிறது. கடந்த வாரம் கிலோ 30 ரூபாய் வரை விலை கிடைத்தது. அதிக விலை கிடைக்கிறதே என்பதற்காக சிலர், முன்கூட்டியே காய்களை பறித்து சந்தைக்கு கொண்டு செல்கின்றனர். அந்த காய்களை பழுக்க வைக்கும் போது, போதிய ருசியில்லாததால் வாடிக்கையாளர்கள் ஏமாற்றம் அடைகின்றனர்.
காற்றுக்கு விழும் காய்கள்: பகலில் கடுமையான வெயில் அடிக்கும் சூழ்நிலையில், மாலையில் பலத்த காற்றுக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் பிஞ்சு காய்கள் கொத்துக் கொத்தாக கீழே விழுகின்றன. 70 கிலோ கொண்ட மூடை 100 ரூபாயிலிருந்து 110 ரூபாய் வரை விலை போகிறது. ஊறுகாய் தயாரிப்பதற்காக வியாபாரிகள் பெருமளவில் அதை வாங்கிச் செல்கின்றனர். குறைவான மரங்களே காய்த்துள்ள நிலையில், பலத்த காற்றால் காய்கள் உதிர்ந்து வருவதால் விவசாயிகள் மிகவும் கவலையில் உள்ளனர். பழமாக விற்றாலாவது சற்று கூடுதல் வருமானம் கிடைக்குமே என்ற ஆதங்கத்தில் உள்ளனர்.

**கற்றாழை சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் : கற்றாழை சாறுக்கு சிங்கப்பூரில் கிராக்கி**

பல்லடம்: சிங்கப்பூரில் கற்றாழை சாறுக்கு தொடர்ந்து கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது; பல்லடம் பகுதியில் கற்றாழை சாகுபடியில் விவசாயிகள் அதிகம் ஆர்வம் காட்டத்துவங்கியுள்ளனர். மேலும், கற்றாழையில் அதிக மகசூல் கிடைக்க வேளாண் துறையினர் தொழில்நுட்ப உதவிகள் வழங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் விவசாயிகளிடம் ஏற்பட்டுள்ளது.

பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் 1,000க்கும் மேற்பட்ட காற்றாலைகள் உள்ளன. ஒரு கோடி ரூபாய் முதல் நான்கு கோடி ரூபாய் வரையிலான காற்றாலைகள், இங்கு மிக அதிக அளவில் நிறுவப்பட்டுள்ளன. தங்களின் நுகர்வு போக மீதமுள்ள மின்சாரத்தை, அரசுக்கு விற்பதன் மூலம் கட்டுபடியான லாபம் கிடைப்பதால், தமிழகத்தில் உள்ள பல்வேறு பெரிய நிறுவனங்கள், பல்லடம் மற்றும் சுல்தான்பேட்டை வட்டாரத்தில் காற்றாலைகள் அமைத்துள்ளன. காற்றாலைகள் அமைப்பதற்கு பல நிறுவனங்கள், அதற்கு தேவையான நிலத்தை விலை கொடுத்து வாங்கியுள்ளன. சில நிறுவனங்கள், குறிப்பிட்ட ஆண்டுக்கு குத்தகைக்கு விவசாயிகளிடம் நிலம் பெற்றுள்ளன.

செலக்கரிச்சல், சித்தநாயக்கன்பாளையம், இடையர்பாளையம், பாப்பம்பட்டி, போகம்பட்டி உட்பட பல இடங்களில் காற்றாலைகள் அமைக்கப்பட்ட விவசாய பூமியில் காலியாக இருக்கும் இடத்தில் விவசாயிகள், காற்றாலை உரிமையாளர்களின் அனுமதியுடன் கற்றாழை சாகுபடி செய்து, அறுவடை செய்யும் பணியில் சில ஆண்டுகளாக ஈடுபட்டு வருகின்றனர். மானாவாரி பயிரான கற்றாழை சாகுபடிக்கு வாழை, தென்னை போன்ற பயிர்கள் போல் தண்ணீர் அதிகம் தேவை இல்லை; மழை காலங்களில் பெய்யும் மழை நீர் மட்டுமே போதுமானது. விதை நடவு செய்த ஆறு மாதத்தில் கற்றாழை, அறுவடைக்கு தயாராகிறது. ஆண்டுக்கு இரு முறை நல்ல முறையில் வளர்ந்து, செழுமையாக உள்ள கற்றாழையில் இருந்து சாறு எடுக்கலாம். கற்றாழை சாற்றில் இருந்து தலைக்கு போடும் ஷாம்பூ, ஷேவிங் செய்வதற்கான கிரீம், கற்றாழை சோப், அழகு நிலையங்களில் பயன்படுத்தப்படும் பல்வேறு வகையான அழகுசாதன பொருட்கள் மற்றும் உடல் உஷ்ணத்தை தடுக்கும் மருத்துவ பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.

இதன்காரணமாக, கற்றாழை சாற்றுக்கு மார்க்கெட்டில் தொடர்ந்து வரவேற்பு இருந்த வண்ணம் உள்ளன. பல்லடம் பகுதியில் பல்வேறு இடங்களில் 50 ஏக்கர் பரப்பளவிற்கு கற்றாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளன. பல்லடம் பகுதி விவசாயிகளிடம் தாராபுரம், சேலம், கோவை வியாபாரிகள் ஒரு லிட்டர் கற்றாழை சாறு 100 ரூபாய்க்கு கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் கொள்முதல் செய்தனர். தற்போது, லிட்டருக்கு 25 ரூபாய் உயர்த்தி லிட்டர் 125 ரூபாய்க்கு கொள்முதல் செய்கின்றனர். கொள்முதல் செய்யப்படும் சாறு, பதப்படுத்தப்பட்டு, புதுச்சேரி, மும்பை, மலேசியா, சிங்கப்பூர் பகுதிகளுக்கு மதிப்புகூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்க அனுப்பப்படுகிறது. ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் முதலீடு செய்தால், ஆண்டுக்கு குறைந்தபட்சம் 60 ஆயிரம் முதல் 75 ஆயிரம் ரூபாய் வரை வருமானத்தை கற்றாழை அள்ளிக்கொடுப்பதாக, விவசாயிகள் தெரிவிக்கின்றனர். சிங்கப்பூரில் கற்றாழை சாறுக்கு தொடர்ந்து வரவேற்பு கிடைப்பதால், பல்லடம் பகுதியில் உள்ள பல விவசாயிகள் கற்றாழை சாகுபடிக்கு ஆர்வம் காட்டத்துவங்கியுள்ளனர். கற்றாழை சாகுபடியில் அதிக மகசூல் பெற வேளாண் துறையினர் உரிய தொழில்நுட்பம் பற்றி தெரிவித்தால், தங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என விவசாயிகள் மத்தியில் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு உதவாத வேளாண் பொறியியல் துறை: உடுமலையில் கோட்ட அலுவலகம் அமைக்க கோரிக்கை**

உடுமலை : உடுமலையில், வேளாண் பொறியியல் துறை கோட்ட அலுவலகத்தை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வேளாண் சாகுபடியில் அதிகரித்துள்ள தொழிலாளர் தட்டுப்பாடு போன்ற பிரச்னைகளால் பண்ணைக்கருவிகளின் பயன்பாடு அதிகரித்துள்ளது. கருவிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த, மானியத்தில் கருவி வழங்கல் ,தேவையான இயந்திரங்களை குறைந்த வாடகையில் விவசாயிகளுக்கு வழங்கவும் வேளாண் பொறியியல் துறை இயங்கி வருகிறது. மத்திய, மாநில அரசுகளும் இத்துறையின் கீழ் பல்வேறு நலத்திட்டஉதவிகள் வழங்கி வருகிறது. உடுமலை பகுதியில் அமராவதி மற்றும் பி.ஏ.பி., பாசனத்தில் ஒரு லட்சம் ஏக்கர் பரப்பளவு சாகுபடி உள்ள நிலையில், வேளாண் பொறியியல் பிரிவு அலுவலகம் இல்லாமல் விவசாயிகளுக்கு இத்துறை குறித்து தெரியவில்லை.

கோவை மாவட்டத்தில் உடுமலை பகுதி இருந்த போது பொள்ளாச்சியில் இத்துறை அலுவலகமும், புதிய திருப்பூர் மாவட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள நிலையில், தாராபுரம் உதவி செயற்பொறியாளர் அலுவலக கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டது. இதனால், உடுமலை பகுதி விவசாயிகளுக்கு வேளாண் பொறியியல் துறை மூலம் உதவிகள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் கிடைப்பதில் சிக்கல் நீடித்து வருகிறது. வேளாண் பொறியியல் துறை சார்பில் நீர் வள நில வளத்திட்டத்தின் கீழ் சொட்டு நீர் குழாய்களை மாற்றி புதிய குழாய் அமைக்க மானியம் அளிக்கப்படுகிறது. பாசன சங்கங்கள் மூலம் இதற்கான விண்ணப்பங்களை விவசாயிகள் அளிக்கின்றனர். உடுமலை மற்றும் குடிமங்கலம் பகுதியிலுள்ள பி.ஏ.பி., பாசன சங்கங்கள் அனைத்தும் பொள்ளாச்சி பிரிவு அலுவலக கட்டுப்பாட்டிலேயே தொடர்கிறது. இதனால், விண்ணப்பங்களை வேளாண் விரிவாக்க மையங்களில் விவசாயிகள் அளித்தாலும் அடுத்த கட்ட பணிகளுக்காக பொள்ளாச்சிக்கும், தாராபுரத்திற்கும் செல்ல வேண்டிய அவல நிலை உள்ளது.

பிரச்னைகளுக்கு தீர்வாக திருப்பூர் மாவட்டத்தில் அதிக விவசாய சாகுபடி பரப்பை கொண்டுள்ள உடுமலை பகுதியில் வேளாண்பொறியியல் துறை கோட்ட அலுவலகம் அமைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது குறித்து விவசாயிகள் கூறியதாவது: நெல், கரும்பு, மக்காச்சோளம், தென்னை உட்பட அனைத்து சாகுபடிகளிலும் பண்ணைக்கருவிகளின் தேவை அதிகரித்துள்ளது. உழுதல், களை எடுத்தல், தண்ணீர் பாய்ச்சுதல், அறுவடை போன்ற பணிகளுக்கு ஆட்கள் கிடைக்காததால் கருவிகள் பயன்பாடு அதிகரித்துள்ளது. வேளாண்பொறியியல் துறை மூலம் பல லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியும், உடுமலை, மடத்துக்குளம், பெதப்பம்பட்டி வட்டார விவசாயிகளுக்கு பலன் இல்லை. எனவே, விவசாயிகள் எளிதில் பயன்பெறும் வகையில் வேளாண்பொறியியல் துறை கோட்ட அலுவலத்தை உடுமலையில் அமைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்', என்றனர்.

**மகசூல், விலை அதிகரிப்பால் மீண்டும் களை கட்டுகிறது பருத்தி சாகுபடி**

உடுமலை : உடுமலை பகுதியில் நீண்ட இடைவெளிக்கு பிறகு பருத்தி சாகுபடியில் விளைச்சலும், விலையும் கிடைத்துள்ளதால் அடுத்த சீசனில் சாகுபடி பரப்பு அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.

உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் பருத்தி சாகுபடி பிரதானமாக இருந்தது. 50 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வந்த பருத்தி சாகுபடி, அதி வேகமாக பரவிய புதிய நோய்கள், தொழிலாளர் பற்றாக்குறை, விலை சரிவு ஆகிய காரணங்களினால் பருத்தி சாகுபடி காணாமல் போனது. இதனை நம்பி இயங்கி வந்த ஜின்னிங் மில் மற்றும் நூற்பாலைகளும் பாதித்தது. பருத்தி சாகுபடி பரப்பை மீண்டும் அதிகரிக்க மத்திய அரசு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தி, விதை மற்றும் இடுபொருட்களை மானியமாக வழங்கிய நிலையிலும், விவசாயிகள் பருத்தி பயிரிட முன் வரவில்லை.

கடந்தாண்டு , பி.ஏ.பி., நான்காம் மண்டல பாசனத்திற்கு மில் நிர்வாகங்களின் ஒப்பந்த சாகுபடி மற்றும் மத்திய அரசு திட்டத்தின் கீழ் பருத்தி பயிரிட ஒரு சில விவசாயிகள் முன்வந்தனர். அறுவடை சமயத்தில் விலை சரிவு ஏற்பட்டு நஷ்டம் ஏற்பட்டது. இந்நிலையில், ஆந்திரா போன்ற மாநிலங்களில் சாகுபடி பாதிக்கப்பட்டதால் பருத்திக்கு நல்ல விலை

கிடைக்கிறது என்ற விழிப்புணர்வு விவசாயிகளிடையே ஏற்படுத்தப்பட்டது. இதனையடுத்து , பி.ஏ.பி., முதலாம் மண்டல பாசனத்திற்கு விவசாயிகள் பருத்தி பயிரிட ஆர்வம் காட்டினர். புதுப்பாளையம் கிளை வாய்க்கால் பாசன பகுதிகளான விருகல்பட்டி, புதுப்பாளையம், அடிவள்ளி, ராமச்சந்திராபுரம், கொங்கல்நகரம் போன்ற பகுதிகளில் விவசாயிகள் நீண்ட இழை பருத்தி ரகத்தை பயிரிட்டனர். நல்ல விலை கிடைக்கும் நிலையில் இந்தாண்டு விளைச்சலும் திரும்பியுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். சராசரியாக ஏக்கருக்கு 15 குவிண்டால் வரை விளைச்சல் கிடைத்துள்ளது.

இது குறித்து விவசாயிகள் கூறியதாவது: பருத்தி செடிகளை தாக்கும் புழுக்களை கட்டுப்படுத்துவதே அதிக செலவு பிடிக்கிறது. இந்த சீசனிலும் புரூட்டோனியா போன்ற நோய் தாக்குதல் ஏற்பட்டாலும், மழையால் செடிகள் பாதிக்கப்படவில்லை. ஒழுங்கு முறை விற்பனை கூடங்களிலும், உள்ளூர் கொள்முதலிலும் நல்ல விலை கிடைக்கிறது. இந்த சீசனில் ஏக்கருக்கு 25 ஆயிரம் வரை லாபம் கிடைக்கும் நிலை உள்ளது. தொழில் நுட்ப ஆலோசனைகள் மற்றும் மானியத்திட்டங்களை இந்திய பருத்தி கழகத்தின் மூலம் செயல்படுத்துவதால் சாகுபடி பரப்பு மேலும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது', இவ்வாறு தெரிவித்தனர்.

**உரித்தாலும், விதைத்தாலும்...கண்ணீர்!:'சருகாய்' மாறிய வெங்காய சாகுபடி**

ஏப்ரல் 05,2010,00:00 IST



உடுமலை:வறட்சி மற்றும் விதை பற்றாக்குறை காரணமாக, இந்த ஆண்டு உடுமலை பகுதியில் வெங்காய சாகுபடி பாதித்துள்ளது.உடுமலை, பல்லடம் மற்றும் சுற்றுப் பகுதிகளில் சின்னவெங்காயம் 50 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இரண்டு சீசன்களில் மட்டும் பயிரிடப்பட்டு வந்த சின்ன வெங்காய சாகுபடி வீரிய ரக விதை நடவால் ஆண்டில் ஏழு மாதங்கள் பயிரிடப்படுகிறது. வீரிய ரக விதைகள் 70 நாட்களில் அறுவடைக்கு தயாராவதால் சாகுபடி பரப்பு அதிகரித்து வந்தது.

---

ஜனவரி மாதத்தில் பி.ஏ.பி., முதலாம் மண்டல பாசனம் மற்றும் கிணற்றுப்பாசனத்திற்கு உடுமலை பகுதி விவசாயிகள் வெங்காயம் பயிரிட ஆர்வம் காட்டினர். ஆனால், விதை வெங்காயத்திற்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு, விலை பல

மடங்கு அதிகரித்து; சாகுபடி செலவும் அதிகரித்தது.குறிப்பிட்ட நேரத்தில் விதை கிடைக்காமல், நடவு பணி தாமதமானது. விதை மற்றும் இடுபொருட்கள் விலை உயர்வு, தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக, ஏக்கருக்கு சின்னவெங்காயம் சாகுபடி செலவு 50 ஆயிரம் ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

இந்நிலையில், இந்த ஆண்டு பருவமழைகள் குறைந்தது, கடும் வறட்சி ஆகிய காரணங்களினால் வெங்காய பயிர்களுக்கு குறித்த நேரத்தில் தண்ணீர் கிடைக்கவில்லை. பி.ஏ.பி., பாசனத்திலும் காண்டூர் கால்வாய் உடைப்பு போன்ற பிரச்னைகளால் போதிய தண்ணீர் கிடைக்கவில்லை.இதனால், பல இடங்களில் வெங்காய பயிர்கள் தண்ணீர் இல்லாமல் கருகும் நிலை ஏற்பட்டது. மேலும், இலை கருகல் உட்பட பல்வேறு நோய்த்தாக்குதல் பரவியதால் இந்த சீசனில் விளைச்சல் வெகுவாக குறைந்துள்ளது.

வீரிய ரக விதைகளில், ஏக்கருக்கு சராசரியாக 6 முதல் 8 டன் வரை விளைச்சல் வீரிய ரக விதைகளில் கிடைத்து வந்தது. தற்போது, 6 டன்னுக்கும் குறைவாக மகசூல் மட்டுமே கிடைக்கிறது.சாகுபடி செலவு அதிகரித்துள்ள நிலையில், மகசூல் குறைந்துள்ளதால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.விவசாயிகள் கூறுகையில், ' வெங்காய விதைகளுக்கு நடவு பணிகளின் போது போலியாக தட்டுப்பாடு ஏற்படுத்தி விலையை பல மடங்கு உயர்த்தி விட்டனர். நடவடிக்கை எடுக்க வேண்டிய தோட்டக்கலைத்துறை கண்டுகொள்ளவில்லை.

பாசன சங்கங்களுக்கு நீர் வள நில வளத்திட்டம் மற்றும் துல்லிய பண்ணை திட்டத்தில் வெங்காய விதைகளை வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தும் பயனில்லை. இதனால், சாகுபடி தாமதமாக துவங்கி விளைச்சல் வெகுவாக குறைந்துள்ளது. ஏக்கருக்கு 20 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அடுத்த சீசனிலும் விதைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படாத வகையில் தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

### சுற்றுலா பயணிகளை கவரும்

# பிளம்ஸ் பழங்கள் விற்பனைக்காக குவிப்பு

ஊட்டி, ஏப்.5-
நீலகிரி மாவட்டத்தில் விளையும் பிளம்ஸ் பழங்கள் தற்போது விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டுள்ளன.

## பழங்கள்

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை, காய்கறிகளுக்கு அடுத்தபடியாக பல்வேறு வகையான பழங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இங்கு விளையும் பழங்கள் வெளி மாநிலங்கள், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப் படுகிறது.

இந்த மாவட்டத்தில் பழங்களின் ராணி என்று அழைக்கப்படும் மங்குஸ்தான், குழந்தை பாக்கியம் தரும் துரியன் பழம், வால்பேரி, பிளம்ஸ், சப்போட்டா, ஸ்ட்ரா பெர்ரி, பட்டர் புரூட், பெர்சிமன், விக்கி, ஊசி பழங்கள், ஆப்பிள், ஆரஞ்சு, பம்பளிமஸ் உள்ளிட்ட பல்வேறு வகையான பழங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

## பிளம்ஸ் பழங்கள்

இந்த பழங்களில் முக்கிய மானது பிளம்ஸ் பழங்கள். நீலகிரி மாவட்டத்தில் அதிகளவில் விளையும் பழங்களுள் இதுவும் ஒன்று இந்த பழம் பார்ப்பதற்கு சிவப்பு நிறத்தில் காட்சியளிக்கும். சிறிய அளவு கொண்டதாக உள் ளது.

இந்த பழம் இனிப்பு சுவையும், புளிப்பு சுவையும் கொண்டது. இதனால் இந்த பழத்திற்கு எப்போதும் பொது மக்கள் மத்தியில் அதிக வரவேற்பு உண்டும். மேலும் இதனை ஏழைகளின் ஆப்பிள் என்றும் அழைக்கப்படுகிறது.

## சுற்றுலா பயணிகள்

நீலகிரி மாவட்டத்திற்கு சுற்றுலா வரும் சுற்றுலா பயணிகள் மறவாமல் இந்த பழத்தை வாங்கிசெல்கின்றனர். தற்போது நீலகிரியில் பிளம்ஸ் பழங்கள் சீசன் தொடங்கி உள்ளது.

மரங்களில் கொத்து கொத்தாக காய்த்து குலுங்கும் பிளம்ஸ் பழங்களை கண்டாலே நாவில் எச்சி ஊறும். தற்போது இந்த பழங்கள் விற்பனைக்கு அதிகளவில் குவித்து வைக்கப் பட்டு உள்ளது. இதனை அனைவரும் வாங்கி செல் கின்றனர்.

## கிலோ ரூ.120-க்கு விற்பனை

தற்போது பிளம்ஸ் பழங்கள் கிலோ ஒன்று ரூ.120-க்கு விற்பனை செய்யப்படுகிறது. மேலும் பைகளில் அடைக்கப் பட்டும் விற்பனை செய்யப் படுகிறது.

பிளம்ஸ் பழங்கள் கிலோ ஒன்று ரூ.120-க்கு விற்பனை செய்யப்படுவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும் இதன் மூலம் அவர் களுக்கு நல்ல வருமானமும் கிடைக்கிறது.



நீலகிரியில் விளையும் பிளம்ஸ் பழங்கள் விற்பனைக்காக ஊட்டியில் குவித்து வைக்கப்பட்டிருக்கும் காட்சி.